# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 115 இதழ்: 45 1-12-1989 (டிசம்பர். 1 — டிசம்பர்.8) ரூபா 1-50— இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



### விளம்பரங்கள்

மரண ஞாபகம் பற்றிய விளம்பரங்களைப் பத்திரிகையில் பிரசுரிப்பதால் வேறு பல ஆக்கங்களை நாம் வெளியிடமுடியாது இருக்கிறது. எனவே இவ் விளம்பரங்களை குறைக்க ஒருவருக்கு ஒரு முறை மட்டும் என்ற கட்டுப்பாட்டைப் புகுத்த விரும்புகிறோம். எனவே விளம்பரதாரர்கள் இதனைக்கருத்தில் கொள்ள பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.


## திருச்சபையின் புதிய சட்டத்தொகுப்புக்கு அமைய, தேச கலாச்சாரங்களை வழிபாட்டில் புகுத்த இந்திய கத்தோலிக்க ஆயர் மன்றம் அங்கீகாரம்.

# கத்தோலிக்க திருமணச் சடங்குகளில் நாட்டுவழக்கங்களைச் சேர்க்க முடிவு

**நவம்பர் 9 முதல் 16 வரை இந்திய கத். ஆயர் மன்றம் கூடி குருத்துவ உருவாக்கல், பொது நிலையினர் பங்கு, தாழ்த்தப்பட்டவர் பிரச்சினை, கல்வியில் சிறுபான்மையினரின் உரிமை, பொதுவாழ்வில் ஊழல், நாட்டில் நிலவும் இனக்கலவரம், சமூக, அரசியல், பொருளாதார நிலமைகள் பற்றி ஆராய்ந்தது.**

1990இல் நடைபெற வேண்டிய இந்திய கத்தோலிக்க ஆயர் மன்றம் எதிர்வரும் ஐப்பசியில் உரோமாபுரியில் "குருத்துவ உருவாக்கல்" பற்றி நடைபெறவுள்ள ஆயர் மன்றத்துக்கு தயார்படுத்தும் முகமாக நவம்பர் 9–16இல் புதுடில்லிக்குக் கிழக்கே 1400 கி. மீ. இல் உள்ள மேகாலயா மாநிலத்திலுள்ள சில்லோங்கில் கூடியது.

புதிய ஆயர் மன்றத் தலைவராக சென்ற ஆண்டு ஆயர் திருநிலைப்படுத்தலின் வெள்ளி விழாக் கண்ட பெங்களூர் பேராயர் அல்போன்சஸ் மத்தாய்ஸ் (வயது61) 13ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டார்.

லத்தீன் மரபைச் சேர்ந்த 98 மறைவட்டங்களின் நூறு ஆயர்களைக்கொண்ட இந்திய கத். ஆயர் மன்றம் அதன் 80 பிரதிநிதிகளுடன் நவம்பர் 6ஆம் திகதி கல்கத்தா பேராயர் ஹென்றி டீசூசா தலைமையில் கூடியபோது கத். திருச்சபையின் புதிய சட்டத்தொகுப்புக்கமைய திருமண் திருவருட்சாதன சடங்கில் நாட்டு வழக்கங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆயர்கள் சில்லோங்கில் இருந்த சமயம் நவம்பர் 12இல் வருடாந்த நற்கருணைப் பவனி நடைபெற்றது. லத்தீன், சீரோ மலபார், மலங்கரா மரபுகளைச் சேர்ந்த 122 மறைவட்டங்களின் 126 ஆயர்களில் 17 பேராயர்கள் 2 கருதினால்கள் உட்பட 106 ஆயர்கள் நற்கருணைப் பவனியில் பங்கு கொண்டனர். மறைவட்டத்தின் 29 பங்குகளிலுமிருந்து 75,000 பக்தர்கள் என்றுமில்லாதவாறு அன்று பவனியில் பங்கு கொண்ட போது மக்கள் வெள்ளம் நகரை அலங்கரித்தது.

ஆயர்களுக்கு மக்கள் அளித்த வரவேற்பின்போது பூனா ஆயர் வலேரியன் டீ சூசா கிற்றார் இசைக்கருவியை வாசித்து, சங்கீதத்திலுள்ள ஒரு பாடலைப் பாடி பாடும் ஆயர் என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார்.

## திருமணத்திற்கு ஆயத்தம் அவசியம்

திருவனந்தபுரத்தில் கூடிய அனைத்திந்திய பொதுநிலையினர் கழகம் தனது 14 ஆவது வருடாந்த மகாநாட்டில் கிறிஸ்தவ குடும்பத்தைத் தனது கருப்பொருளாகக் கொண்டிருந்தது.

அதற்குத் தலைமை வகித்த கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் மார் இற கோரியாஸ் கூறியதாவது.

"குடும்பங்களைக்கட்டியெழுப்புவது ஒரு திறமை வாய்ந்த கலையாதலால் திருமணத்துக்கு முன் இளைஞர் நன்கு ஆயத்தம் செய்யப்படவேண்டும்"

"சீரோ மலங்கார மரபில் குடும்பங்களில் வேதாகம வாசினை மட்டுமல்லாது திருவழிபாட்டுச் செபங்களும் சொல்லப்பட்டு வருவது, மக்கள் தாம் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர்ந்து கிறிஸ்தவ வாழ்வுக்கு பிரமாணிக்கமாக இருக்கத் துணை புரிகிறது" எனவும் கூறினார்.

## அருள்திரு. K. B. சந்தியாப்பிள்ளை காலமானர்


ஆனைக்கோட்டை – நவாலி பங்குத்தந்தை அருள்திரு. இங்ஸ்லி புறூனோ சந்தியாப்பிள்ளை நோய்வாய்ப்பட்டு நவ. 29 இரவு காலமானர்.

1930 ஐப்பசி 6 இல் பிறந்த இவர் 1956 இல் உரோமாபுரியில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். நாரனுட்டான், பாஷையூர், மன்னர், யாழ். ஓ. எல். ஆர், குருநகர், மாதகல், மயிலிட்டி, கோப்பாய்,நவாலி ஆகிய பங்குகளில் முறையே 1962, 1965, 1970, 1973, 1977, 1981 1986, 1987, 1988 இல் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியவர். 1973 முதல் 1981 வரை யாழ். மறைவட்ட பொருளாளராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு அடக்கச்சடங்கு நடைபெறும்.

## கடன்திருநாள் மாற்றம்

இலங்கை ஆயர் மன்றம் ஜனவரி 1ம் திகதியைக் கடன் திருநாள் என்றும், திருக்காட்சி விழா, விண்ணேற்ற விழா என்பன, அதற்குப் பின்வரும் ஞாயிறு தினங்களில் கொண்டாடப்படும் என்றும் அறிவித்துள்ளது. ஜனவரி 6க்குப் பின்வரும் ஞாயிறு திருக்காட்சி விழா, உயிர்ப்பின் 40ஆம் நாளுக்குப் பின்வரும் ஞாயிறு விண்ணேற்ற விழா. ஜனவரி முதல் திகதி இறைவனின் அன்னை புனித கன்னிமரியாள் விழா (புத்தாண்டு தினம்) கடன் திருநாள் என மாற்றப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு திருவழிபாட்டு நாட்காட்டியைப் புரட்டிப் பாருங்கள். 1990ஆம் ஆண்டுக்கான திருவழிபாட்டு நாட்காட்டியை மார்கழி 15ஆம்திகதி எமது அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## தேசிய விவிலிய வாரம்



### டிசம்பர் 3முதல் 10வரை

(விவிலிய வார சிறப்பிதழ் அடுத்த இதழில்)

**விவிலிய வாரத்தில் இடம்பெறக்கூடிய நிகழ்ச்சிகள்**

1) சிறப்புத் திருப்பலி.
2) விவிலிய வழிபாடு.
3) விவிலிய விழா சுவரொட்டிகள்.
4) பட்டி மன்றம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, மனப்பாடப் போட்டி வழக்காடுமன்றம்.
5) விவிலிய விநாடி–வினா,
6) விவிலியப்பவனி.
7) விவிலியப் பொருட் காட்சிகள்.
8) ஒலி பெருக்கிவழி இறைவாக்குப் பரப்புதல், விவிலியப் பாடல்கள் முழங்குதல்.
9) விவிலிய வெளியீடுகள் விற்பனை.
10) விவிலிய வகுப்புகள் நடத்துதல்.
11) விவிலியக் கதாபாத்திரங்கள் போல (பான்ஸிடிரஸ்) அணிதல்
12) வீடுகளில் விவிலிய அரங்கேற்றம் புதுப்பித்தல்.
13) நாற்சந்தியில் விவிலிய முழக்கம், விவிலிய நாடகம், படக்காட்சி, நாட்டிய நாடகம், கதாகாலட்சேபம், வில்லுப்பாட்டு.



## கிறிஸ்மஸ் சிறப்பிதழ் 22-12-89

இதழ் 47, 48, கிறிஸ்மஸ் சிறப்பிதழ் 22ம்திகதி வெளிவரும். ஆண்டுக்கு 50 இதழ்கள் விரிக்கும் பாதுகாவலன் இவ்வாண்டு இரண்டு இதழ்களை விரிக்க முடியாமல் போய் விட்டது. கிறிஸ்மஸ் சிறப்பிதழ் இரு இதழ்களின் தொகுப்பாதலால் விலை ரூபா 3/- .ஆக்கங்களை டிசம்பர் 10 வரை எழுத்தாளர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வோம்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்கருத்து

### ஒன்றித்திருப்போம்

காளான்கள், புற்றீசல்கள் போல முளைத்து எழுகின்ற பல்வேறு சபைகள், உண்மையான கிறிஸ்தவர்களுக்கு வேதாகமத்தின் சில பகுதிகளை மேற்கோள் காட்டி அறிவுரை கூறி தம் வசப்படுத்துவது இக்கால மக்கள் படும் தொல்லைகளில் ஒன்று.

“யாரும் உங்களை ஏமாற்றுதபடி பார்த்துக் கொள்ளுங்கள். பலர் வந்து என் பெயரை வைத்துக் கொண்டு, ‘நானே அவர்’ என்று சொல்லிப் பலரை ஏமாற்றுவார்கள்” (மாற். 13 : 5 - 6)

சாதாரண மக்கள் மட்டுமல்ல, கல்வி அறிவுள்ளவர்களும் திசைதிருப்பப்படுகின்ற அளவுக்கு, திருச்சபைக்கு எதிராக பற்பல போதனைகளை முன்வைத்து, மக்களை மனம் மாற்ற வேதாகமத்தின் சில பகுதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

டிசம்பர் 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை உள்ள நாட்களை கிறிஸ்தவ சபைகள் வேதாகம வாரம் என அனுசரித்து வருகின்றன.

கத்தோலிக்க திருச்சபையுடன் பிரிந்த கிறிஸ்தவ சபைகள் இணைவதற்குப் பற்பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில், திருச்சபை பல கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் ஜனவரி 18 முதல் 25 வரை எல்லாப் பிரிந்த கிறிஸ்தவர்களாலும் அனுசரிக்கப்பட்டு, செபம், தியானம், கருத்துப் பரிமாறல்கள் மூலம் ஒற்றுமைக்கான உழைப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

அதே வரிசையில் இவ்வாரம், வேதாகம வாரமாக நினைவுகூரப்பட்டு கிறிஸ்தவர்களுக்கு அருள் வாக்கு வழங்கும் தேவவார்த்தைகளின் உட்பொருள், அதன் பலாபலன் என்பன போற்றப்படுகின்றன. மக்கள் இறைவார்த்தைக்கு ஆர்வமுடன் செவிசாய்க்கவும், அதன்படி வாழவும் வேண்டிய அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

கத்தோலிக்க திருச்சபையின் கற்பனையின்படி எந்த ஒரு தனி மனிதனும் தான் விருப்பியதுபோல வேதாகமத்துக்கு விளக்கம் கொடுக்க முடியாது. திருச்சபையின் பாரம்பரியத்தில் வெளிப்படுத்தப்பட்ட விசுவாச சத்தியங்களை மையமாகக் கொண்டே அவற்றிற்கான விளக்கங்களைக் கொடுக்க முடியும்.

இக்கால சந்ததி இந்த உண்மையை அறியாதவர்களாக இருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

அடிப்படைவாதப் குழுக்கள், அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றி கிறிஸ்துவைப் போதிப்பதாகக் கூறி, பல கத்தோலிக்க விசுவாசிகளைக் கவர்ந்து கொள்ள முற்படும் வேளையில் நாம் எச்சரிக்கையாக இருப்பதோடு, எம்மவர்களுக்கு குறைவாக இருக்கின்ற விசுவாச சத்திய அறிவைக் கொடுக்கவும், விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இச்சிறு பகுதியில் இவ்வுண்மையை விளக்குவது இயலாத காரியம். ஆயினும் இப்படியான கருத்து இருக்கிறது என்பதையாவது உணர்த்தவேண்டியது எமது பொறுப்பாகும்.

“வீட்டுக்கு ஒரு விவிலியம்” என்ற விருதுவாக்கு முழங்கும் இவ்வாரத்தில் எமது இல்லங்களிலும், இறைவார்த்தையைத் தியானிக்க வேதாகமப்புத்தகம் இருக்கிறதா என்று தேடிப்பார்த்து இல்லாவிடின் அக்குறையைப் போக்கிடுவோம்,

வேதாகமத்துக்குத் தான்தோன்றித்தனமான விளக்கம் கொடுக்க முற்படுகிறவர்களுக்குத் தகுந்த விடைபகர திருச்சபையின் பாரம்பரியத்தின் ஒளியில், திருச்சபை கற்பிக்கின்ற முறையிலே அவற்றிற்கு விளக்கம் அளிக்க அறிந்துகொள்வோம்.

“நாம் ஒன்ருய் இருப்பதுபோல நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களும் ஒன்ருய் இருக்க வேண்டும்” என செபித்த இறைமகன் கிறிஸ்துவிடம் ஒப்படைக்கப்பட்ட நாங்கள் ஒன்றித்திருக்க, பிரிந்து செல்லாதிருக்க வழி காட்டுவோம். விசுவாசத்தில் உறுதிப்படுத்துவோம்.

## தேனருவி

### திருவருகைக்காலம் 1-ம் ஞாயிறு (03-12-89)

### விழித்தெழுங்கள்

ஆண்டுதோறும் பிறக்கும் தூண்டும் காலம்தான் இரு இயேசுவின் பிறப்புவிழா இம் வருகைக் காலம். கிறீஸ்து முறை எப்படிப் பிறக்கப் பிறப்பின் 700 ஆண்டுகளுக்கு போகிறது என்று சிந்திக்கத் முன் இறைவாக்கினர் இசை

இசை. 2 : 1 - 5 ஆண்டவரின் ஒளியில் நடப்போம்.
உரோ. 13 : 11 - 14 கண்ணியமாக நடந்து கொள்வோம்.
மத். 24 : 37 - 44 விழிப்பாயிருங்கள், ஆயத்தமாயிருங்கள்.

### திருவருகைக்கால முதல்வார வழிபாடு

நாம் எதிர்பார்த்துக் களைத்துவிட்ட சமாதானம், தூரத்திலே கண்டு கைவிட்ட வெளிச்சமாக, மலர்ந்திருக்கும் இத்திருவழிபாட்டு ஆண்டிலும் இருந்துவிடாமல், அதை அடைய நாம் எடுக்கும் முயற்சிகள் நல்ல பயனளிக்க, இறைவன் எம்மை கலங்கரை விளக்காக இருந்து வழிநடத்த வேண்டும் என்று வேண்டுவோம்.

கருப்பொருள்:- சமாதானம் ஒரு கேள்விக்குறி. எமது திட்டம் திட்டத்துடன் இணையும் வேளையில் எங்கும் அமைதி நிலவும் அப்போது செம்மறியோடு ஓநாயும், வெள்ளாட்டுக்குட்டியோடு சிறுத்தைப் புலியும், கன்றோடு சிங்கமும் ஒன்ருகப் படுத்துறங்கும், அங்கே சமாதானம் ஒரு விடையாக மாறும்,

ஆரம்ப பஜனை:- வந்தருளும் ஆண்டவரே உடனே வந்தருளும்.

செபம்:- ஆண்டவரே வாரும், எமது அரசராக வாரும். எமது உள்ளங்களிலே இடம்பெறும் போராட்டங்களுக்கு விடை தந்து எம்மையெல்லாம் வாழவைக்கும் அன்புத்தந்தையாக எமது மனங்களிலே வரவேண்டும் என வேண்டுகிறோம். ஏதோ ஓர் வகையில் இப்போதுள்ள சமாதானமற்ற சூழ்நிலைக்கு நாமும் காரணமாக இருந்திருக்கிறோம் என்பதை உணர்கின்றோம். எனவே நிபந்தனையற்ற அன்பினால் எம்மை மீட்ட இறைவா, ஊதாரி மைந்தன் தன்னிடம் திரும்பி, மனம் வருந்தி ஓடி வரும்போது அவனை மன்னித்து ஏற்றுக்கொண்ட, ஊதாரித்தனமாக அவன்மேல் அன்பைப் பொழிந்த அந்தத் தந்தையைப் போன்று நீரும் எம்மை மன்னித்து ஏற்றுக்கொள்கின்றீர் என்ற நம்பிக்கையோடு நொறுங்கிய உள்ளங்களுடன் உம்மிடம் வருகின்றோம்.

மன்னிப்பு பாடல்:- கருணைத் தெய்வமே கண்பாரும்.

முதல்வாசகம்:- இசை. 11. 1–10
சங்கீதம்:- 36: 1–11
பதிலுரை;- 36: 4
நற்செய்தி:- லூக். 10: 21–24

சிந்திப்போம்:- இறைவனின் விருப்பத்திற்கு முரணுனதாக நமது திட்டங்கள் அமையும் வேளையில் எமக்கு நாமே துன்பத்தை வருவித்துக் கொள்கிறோம். எமது நாட்டிலே, சமுதாயத்திலே கிறிஸ்துவின் பிறப்பின் வருகை சமாதானத்தைக் கொண்டுவர வேண்டுமாயின் எமது மனங்களில் சமாதானம் வேண்டும். ஏனெனில் கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி “நல்மனத்தோர்க்கு சமாதானம் ஆகுக!” என்பதாகும். இறைவன் எம் ஒவ்வொருவரையும் தனியாக முழுமையாக அறிந்துள்ளார். அவர் எமக்குத்தந்த ஆற்றல்கள் திறமைகளுக்கு ஏற்ப, எமக்கென அவர்வகுத்த தனிப்பட்ட திட்டத்திற்கேற்ப எம்மை வழிநடத்துகின்றார். ஏனெனில் நாம் எங்கே தவறுவோம். எமது பலவீனம் எப்படிப்பட்டதென்று அவர் அறிவார். எனவே நாம் ஒருவரை ஒருவர் பார்த்து பொருமைப்பட முடியாது. எனவே எம் ஒவ்வொருவருக்கு அவர் வகுத்ததிட்டத்தை உய்த்துணர்ந்து “உமது சித்தம் பூவுலகில் நிறைவேறுக” என்று செபித்து அனைவரோடும் சமாதானமாக வாழ்வோமாக!

பாடல்: பயன்படுத்தும் இறைவா!

மன்ருட்டுக்கள்:– நீதியோடு கூடிய சமாதானம்.

1) திருச்சபைத் தலைவர்களுக்காக.
2) எமது நாட்டை ஆள்வோருக்காக.
3) எமது மாணவர்களின் கல்விக்காக.
4) இளைஞர்கள் மனப்பயமகன்று வாழ.
5. தனிமையாலும், நோயாலும் வாடுவோருக்காக

முடிவு பஜனை:– அன்பு செய்ய வரம் வேண்டும்.

(இல்லங்களில் நடாத்துவது பொருத்தமானது)

அருள்திரு. கு. யே. அன்ரனிபாலா

பாஸ் மெசியாவின் வருகை பற்றி முன்கூட்டி அறிவித்தவர். இறைவனின் மக்கள் எதிர் நோக்கிய சவால்களில் பெரியவை இவரது காலத்தில் தான் எழுந்தன. அரசியல் ரீதியாகவும், சமயரீதியாகவும் இருளும், கறையும் படிந்த இக்கட்டான சூழலில் மக்கள் உண்மையாகவே இறைவனைக் கைவிட்டு அந்நிய தெய்வங்களையும், அந்நிய தலைவர்களையும் நம்பி நாடிய காலம் அது. விரக்தியின் அழுங்குப் பிடியில் சிக்குண்ட மக்கள் மனதில் நம்பிக்கையின் வித்தை விதைக்கும் பணியை இறைவாக்கினர் இசையாஸ் ஏற்றிருந்தார். இறைவனை நம்பினுல், அவரது பிரசன்னம் தேடினுல் அமைதி கிட்டும். மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடும் என வாக்களிக்கிறார்.

ஆனாலும் இறைவன் பிறந்து இன்றைக்கு 1989 ஆண்டுகள் கடந்து விட்டன. ஏன் இன்னும் உலகில் பாவங்கள் மலிந்து, வன்செயல்கள் வளர்ந்து, துன்பங்கள் தீராது கிடக்கின்றன. இதற்கான காரணத்தை இயேசு நற்செய்தியில் தருகின்றார். நோவா பெட்டகத்தில் நுழையும்போது ஏனைய மக்கள் உண்டும், குடித்தும், பெண் கொண்டும், கொடுத்தும் வந்தனர். அதனுல் அவர்கள் பாவம் பெருவெள்ளமாக அழித்தது. அனைவரும் மாண்டனர்.

எனவே இறைவன் வாக்களித்த மீட்பையும், அமைதியையும், உண்மையான மகிழ்ச்சியையும் காண வேண்டுமாயின் முதலில் நாம் விழித்தெழ வேண்டும்.

ஆயத்தம் வேண்டும் என்கிறார் இயேசு. கண்ணியமாக நடந்து கொள்ளத் (தூண்டுகிறார்) புனித சின்னப்பர் களியாட்டம், குடிவெறி, காமம். சண்டை, பொருமை போன்ற இருளின் செயல்களைக் களைந்து ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணியுமாறு கோருகிறார் புனித சின்னப்பர்.

திருவருகைக் காலத்தை உண்மையில் ஓர் ஆயத்த காலமாக ஏற்று இருளின் நடவடிக்கைகளைக் களைய விழித்தெழுவோம். எம்மில் பலரை இன்று ஆட்டிப்படைக்கும் விரக்தி மனநிலையைக் களைந்து கபிட்சத்தை எதிர்நோக்கும் புதிய உணர்வுகளை வளர்க்க விழித்தெழுவோம்.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

### திருத்தந்தையின் வலியுறுத்தல்

அக்டோபர் 13 ஆம் திகதி சுமாத்திராவுக்கு வருகை தந்த திருத்தந்தை அபிவிருத்தியில் பங்குபற்றுவதன் மூலம் கிறிஸ்தவர்- முஸ்லீம்களிடையேயுள்ள ஒருமைப்பாட்டை வளர்க்கும்படி கேட்டுக்கொண்டார். திருத்தந்தை 150, 000 மக்கள் முன்னிலையில் ஆற்றிய உரையில் “நீதியும் நன்மைத்தனமும் உள்ள ஒரே கடவுளை விசுவசிக்கும் கிறிஸ்தவரும், முஸ்லீம்களும் பேறுபெற்றவர்கள். இறைவனுல் அன்பு செய்யப்பட்ட நாம் பிறரை அன்புசெய்ய மறுக்கக்கூடாது” எனக் குறிப்பிட்டார்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 11 தொமிசியன் கைகளில்...

திருச்சபையின் வரலாற்றில்
தீயெழுத்துக்கள் பதித்த நீரோவின் கதை
கி. பி. 64இல் முற்றுப் புள்ளி பெற்றது.
அதன் பின்
கலாபனை அலைகள் வெகுண்டெழுந்தன.
கி. பி. 81இல் ஆட்சிக்கு வந்த தொமிசியன் காலத்தில்தான்,
அரசருக்குரிய மதிநுட்பமும், கடின உழைப்பும்
அவனிடம் குடிகொண்டிருந்தன.
ஆனால் அவற்றிற்கும் மேலாக
சுயநலமும்,
அதிகார வெறியும்,
சந்தேகப் பேயும் அவனைச் சதிராட வைத்தன.
அவனது அக்கிரமம் ஆரம்பித்ததே
அரச பரப்பரையின் மீதுதான்.
அதற்கு ஒரு காரணமுமிருந்தது.
தொமிசியன் பிறப்பால் ஒரு போர்வீரன்.
அரச பரம்பரையினனல்லன்.
ஆகஜல்
மேல் தட்டு வர்க்கத்திடமும்,
பிரபுக்கள் குழாத்திடமும்
அவனுக்கு அதிக செல்வாக்கு இருக்கவில்லை.
அதை அவனும் அறிந்திருந்தான்.
அவர்களோவெனில்
கி. பி. 88இல்
அவனுக்கெதிரான ராணுவ சதிப்புரட்சியொன்றை
முடுக்கிவிட்டனர்.
அதுவோ தோல்வியில் முடிந்தது.
அதுவே அழிவின் காலமாகவும் அமைந்து போயிற்று.
அரசின் கோபம் முதலில்
பிரபுக்கள் மேல் எழுந்தது.
பின்பு அறிஞர்கள், ஞானிகள், தலைவர்களின்
பக்கம் திரும்பியது.
சற்றில் தன்னை வணங்க மறுத்த
யூதர்கள் கிறிஸ்தவர்கள் மீது நிலைகொண்டது.
அரசகட்டிலுக்கு அருகிருந்தவனும்
தனது நெருங்கிய உறவினனும்
அமைச்சனும்
கிறிஸ்தவனுமான
பிளேவிஸ் கிளமென்சைக் கொன்றான்.
மனைவி பிளேவியா டொமிரில்லாவை நாடுகடத்தினான்.
அப்போஸ்தலரான அருளப்பரை
உரோமைக்கு வருவித்து
கொதிக்கும் எண்ணெயில் போடுவித்தான்.
உயிர்தப்பிவிடவே,
பத்மோஸ் தீவிற்கு நாடுகடத்தினான்.
அரசின் "உத்தியோக பூர்வ கடவுளைத் தவிர
வேறு கடவுளை வணங்குவோரை
நாத்திகர் என அறிவித்து
மரண தண்டனை வழங்கினான்.
இத்தகைய கொடுமைகள்
அவனது ஆட்சியின் இறுதிப்பகுதியில்
92 முதல் 96 வரை உக்கிரகமடைந்தது.
"X" வடிவ சிலுவையில் அறையுண்ட புனித பெலவேந்திரர்,
புனித தீமோத்தேயு
ஆகியோர் இறந்தவர்களில் முக்கியமானவர்கள்.
இத்தகைய கொடிய மன்னன் தொமிசியன்
தான் வளர்த்த வன்முறைக்கே பலியானான்.
பெரும் கிளர்ச்சியொன்றில் கொலை செய்யப்பட்டான்.

சந்திரன்.

## நன்றியுடன் வேண்டிடுவோம்

பெற்று வளர்த்திட்ட
பெற்றோர்கள், பெரியோர்கள்
உற்ற நல்ல உறவினர்கள்
உவப்பான நண்பர்களும்
கற்றுத் தந்த ஆசான்கள்
ஆருமற்ற ஆன்மாக்கள்
நித்தியமாய்ச் சாந்திபெற
நன்றியுடன் வேண்டிடுவோம்!
நாட்டிற்காய் உயிர் நீத்த
நல்லவர்கள், துப்பாக்கி
வேட்டுக்களால் பிரிந்த
அப்பாவி ஆன்மாக்கள்,
வாட்டும் தெருப்பினிலே
வாடாமல் கருணையுடன்
மீட்டிடவே வேண்டிடுவோம்
தேவனையே நன்றியுடன்.
தெரிந்திடுவோம் எம்நிலையும்
திருப்பமுடன் சிந்திப்போம்,
பிரிந்திடுவோம் இவ்வுலகை
பீதியுடன் அதை நினைத்து,
வருந்தி மனம் மாறிடுவோம்,
வாழ்வினிலே புண்ணியங்கள்
புரிந்திடுவோம், பூமியிலே
புனிதமாய் வாழ்ந்திடுவோம்.

யோசேப் தாவீது
அதிபர், வலையன்மட[illegible]

அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித் திட்டத்தின்

# ஆதரவில் நடத்தப்பட்ட போட்டியில் 1-ம் இடத்தைப் பெற்ற கட்டுரை

## நீதியின்றிச் சமாதானமா?

இன்றைய உலகின் எத்திசையை நோக்கினும் சமாதானம், சமாதானம் என்ற வார்த்தை அடிபடுவதைக் காண்கிறோம். செய்தித்தாள்களிலே, மேடைப் பேச்சுக்களிலே, வானொலி சித்திரங்களிலே, ஒளிப்படக்காட்சிகளிலே சமாதானம் என்ற வார்த்தையை நாடிக்கொண்டே இருப்பதைக் காணலாம். சமாதானத்திற்காகப் போர்நிறுத்தம், சமாதானத்திற்காகப் பேச்சுவார்த்தைகள், சமாதானத்திற்காகப் பாதை யாத்திரைகள், சமாதானத்திற்காக உண்ணா நோன்புகள் சமாதானத்திற்காகப் பேருரைகள், மாநாடுகள் இன்னும் எத்தனை? எத்தனை?

சமாதானம் என்பதுதான் என்ன? நீதி, நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன அடங்கிய உயர்ந்த ஒரு பண்பே சமாதானம். மனித மாண்பைப்பெருக்கவேண்டும், அமைதியையும், நிறைவையும் தரவேண்டும். அத்தகைய சமாதானம் நீதியோடு கூடியதாகத்தான் இருக்கும். நீதியின்றி சமாதானம் ஏது? நீதியை வேண்டிநிற்கும் குடும்பங்கள் எத்தனை? பாகப் பிரிவினைக்காக கோடுவரை சென்று நீதியை வேண்டிநிற்கும் நாடுகள், தேசங்கள், இரத்த உறவுகள் எத்தனை? கணவன், மனைவி தகராறுகளில் நீதிகோரிய தம்பதியினர் எத்தனை? சாதிப் பிரிவினைகள் அகற்ற நீதி, பெண்கள் விடுதலைக்காக நீதி.

இத்தனை பிரச்சினைகள் மத்தியில் சமாதானம் நிறுவவதெப்படி? கொலை செய்தவன் சமுதாயத்தில் கும்மாளம் அடிக்க! அப்பாவி மனிதன் சிறைக்கம்பிகளை எண்ணுவதுதான் நீதியா? பெரும் பான்மை இனம், சிறுபான்மை இனத்தை நசுக்கி அடிமை கொள்வது தான் நீதியா? பெரும்பணம் படைத்தவன் ஏழைகளிடம் வட்டி குட்டி வாங்கி சீமானாக வாழ்வதுதான் நீதியா? சீதனம் என்ற போர்வையில் ஏழைப் பெண்களை அடிமை கொள்வது தான் நீதியா? நீதிமன்றங்களிலே கூடப் பணத்திற்காக பேரம் பேசும், சட்டத்தரணிகள் வாழும் சமுதாயத்திலே. நீதி நிலவுவது எங்ஙனம்? எனவே நீதியின்றி சமாதானம் ஏற்படுவது கேள்விக்குறியாக சமுதாயத்தில் ஒரு சவாலாக அமைந்து விடுகிறது என்பதில் ஆச்சரியமில்லை. சமாதானம் வேண்டுமானால் நீதி நிலவ வேண்டும் நீதி நிலவவேண்டுமானால் ஊழல்கள், வஞ்சனைகள், தீமைகள், பொய்கள், புரட்டுக்கள், சூதுகள், வாதுகள், அடக்குமுறைகள், வன்செயல்கள் அத்தனையையும் பூண்டோடு அழிக்க முயற்சிக்க வேண்டும். தன் மனச்சான்றே நீதியைக்காட்டும் அளவுகோலாக மாறுமேயானால் உலகில் குற்றங்கள் குறைந்து நீதியான சமாதானம் நிலவும் என்பதில் சிறிதளவு சந்தேகம் இல்லை. வாழ்க! நீதி, வளர்க! சமாதானம்.

செல்வி:- நாகராசா சுரேகா
ஆண்டு 8 B.
இளவாலை,
கன்னியர் மடம் ம. வி.

## வேதாகம வினாவிடைப் போட்டி -30

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 5-1-90 இற்கு முன் பாதுகாவலன் அ.பெ. இல. 2 யாழ்ப்பாணம், என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூபா 25/-

விடைகளை 2 சாமுவேல் (11—15) இல் காணலாம்.

### வினாக்கள்

1. தாவீது பாவத்தில் விழுந்தபோது ஆண்டவர் தாவீதிற்கு அறிவுரை கூற யாரை அனுப்பினார்?
2. ஆண்டவருடைய எதிரிகள் அவரைப் பழிக்கத் தாவீது காரணமாய் இருந்ததால் அவருக்குக் கிடைத்த தண்டனை யாது?
3. அப்சலோம் யாலா, ஏன் கொன்றான்?
4. அப்சலோம் கொலையைச் செய்தபின் எந்த ஊருக்கு ஓடிப்போனான்?
5. "கடவுட் பேழையை நகருக்குத் திருப்பிக் கொண்டு போங்கள்" இவ்வாறு தாவீது அரசன் யாரிடம் கூறினார்?
6. அப்சலோமிற்கு அம்னோன் என்ன உறவு முறை?

போட்டி 29 இன் சரியான விடைகள்

1. சவுலின் வீட்டு வேலைக்காரன்.
2. அவர்களுடைய ஒரு பக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய ஆடைகளைப் பாதி கத்தரித்து, இடுப்புத் துணியோடு அவர்களை அனுப்பி விட்டான்
3. இஸ்ராயேலர் பிலிஸ்தியருக்குக் கப்பம் கட்டும் கடமை ஒழிந்தது
4. மரத்தினாலானவை.
5. சகோதரன் முறையானவர்.

பரிசுபெறும் நற்பேறுளர்:-
ம. தயாளுஜன்,
வடக்கு வீதி
நாவற்டான்

இம்முறை 143 பேர் சரியான விடைகளை எழுதியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

## மயிர் தேடும் மானிடரே!

— பதில்வரைபு —

அன்பரே! மயிர் தேடும்
மானிடரே
என்று யார் யாரை நீர்
சாடினீரோ
பண்புள்ள எஸ். ஏ நாதர்
அவர்களே! தங்கமகனை கட்டிப்
பார்க்கின்றோம் என்று நீர்
எண்ணியே மயிர் தேடும்
மானிடரே என்றீர்
அன்பரே! தங்கமகனை
தட்டிப் பார்த்தோமோ
இல்லையேல் விவிலியத்தைதான்
பரிகரித்தோமோ என்பது
இருக்கட்டும்.
ஆனால் உண்மை இதுதான்.
மயிர் இருந்தது
என்பது அன்பரே, எஸ். ஏ
நாதரே!
இவ்வுண்மையை மறைக்க
உம்மைப்போல்
பல குரு. கன்னியாஸ்திரிகள்
தான் என்னென்ன
காரணந்தான் கூறினும்
எம்மைப் போன்றோர்
கண்ணை முடமாக்குவது போல்
உள்ளது ஐயா!
உம் செயல் நீர் என்ன
சொல்லினும்
விவிலியத்தில் மயிர் இருந்தது
உண்மை.
உண்மையை மறைக்க
முயலாதீர் அன்பரே!

ஜே. அல்பேட் பாஸ்கரன்
பருத்தித்துறை.

## திருக்குடும்பச் சபையின் வெள்ளி விழா

பண்டிவிரிச்சானில் திருக்குடும்பக் கன்னியர் காலடி வைத்த 25 வது ஆண்டு நிறைவை 30 ஆம் திகதி கொண்டாடினர். இவ்விருக்கான உரையில் அன்பின் மகத்துவம், மனிதனின் [illegible] படைத்தேவைகள் பற்றிய சிந்தனைகளை அருட்திரு. தேவசகாயம்பிள்ளை எடுத்துரைத்தார். புதுவாழ்வுக்குரிய உரைகள் திருக்குடும்ப மாகாணத் தலைவி கிறிஸ்ரபெல் அவர்களாலும், அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அடிகளாலும் வழங்கப்பட்டன. வெள்ளி விழா நன்றிப்பலி ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 25 ஆண்டின் நினைவாக 25 தீபங்கள் ஏற்றிவைக்கப்பட்டன.

தகவல்:-
செல்வி மேரி தியோபின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு அம்மா வேண்டும்!

## சிறுகதை

கார்த்திகை மாதத்து குளிர் இதமாக இருந்தது. நித்திரா தேவியின் சுகமான அரவணைப் பிலிருந்து விடுபடமுடியாமல் தன்னை மறந்து தூங்கிக்கொண் டிருந்தான் ஜெகன். திடீரென அறையில் ஏதோ அரவம் கேட்டு விழித்துக்கொண்டான். இரவு முழுவதும் பெய்த மழை யினால் விடியலுக்கு இன்னும் நேரம் இருப்பது போன்று யன்னலினூடாகத் தெரிந்த கருமேகங்கள் காட்சி கொடுத் தன சே! நித்திரை குழம்பி விட்டதே என்று சலித்துக் கொண்டான். ஒரு சில மணித் தியாலங்களாவது இந்த பாழாய்ப்போன உலகத்தை தற்காலிகமாக மறப்பதற்கு இறைவன் வழங்கிய நன் கொடைதான் நித்திரை என் பது அவனது கணிப்பு. ஒரு அமைதியான உறக்கத்தில் சுகம் காணுவதில் ஜெகனுக்கு ஒரு அலாதியான இன்பம் மீண் டும் பெட்சீற்றை இழுத்து மூட முனைந்தபோது, "ஜெகன், இன்னும் நீ எழும்பல்லையா? இன்றைக்கு அம்மா இறந்த தினம் எண்டத மறந்திடாத. துக்கப் பாடற்பூசை அம்மா வுக்கு இண்டைக்கு வைக்கி றம். சாக்குபோக்கு சொல்லாம கெதியண எழும்பு. அப்பாவும் வெளிக்கிட்டு நிற்கிறார்." என்ற அக்காவின் குரலை கேட்ட போது எரிச்சல்தான் வந்தது.

ரோகான் ஸ்ரனி அன்ரனி
உய்லூர்.

அம்மாவிற்காக அடக்கிக் கொண்டான். அம்மாவும் மறைந்து பத்து வருடங்கள் உருண்டோடி விட்டதை நினைத்தபோது காலச்சக்கரம் மட்டும் தன் கடமையை மறக்கவில்லை என்பது புரிந்தது. அம்மாவினுடைய நினைவுகள் நினைவுத் திரையில் பட்டு தெறித்தபோது அவனையறியா மலே கண்கள் குளமாயின. பதினைந்து வயதில் . பிரிந்த தாயின் இழப்பை இந்த உல கில் எதுவும் ஈடுசெய்ய முடி யுமா? எப்போதும் அம்மா சொல்லும் வார்த்தைகள் "என்ர பிள்ளைகள் கண்கலங் காம வாழ்ந்தா அதுவே எனக் குப் போதும்" இதை நினைத்த போது நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது. அம்மா அநுபவித்த வேதனைகள். துய ரங்கள், சுமைகள் இவற்றை யெல்லாம் அறியாப்பருவத் திலே கண்ணால் பார்த்து கலங் கிப் போய் நின்ற ஜெகனுக்கு வாழ்க்கையே அம்மாவின் இழப்பிற்கு பின் சூனியமாகி விட்டிருந்தது. பொங்கியெழும் நெஞ்சக்குமுறல்களை அடக்கிய வாறு அறையை விட்டு வெளியே வந்தபோது அப்பா தான் எதிர்ப்பட்டார் "என்ன. ஜெகன், எல்லாரும் போயிட் டினம். நீ அம்மாட பூசைக்கு வரல்லையா? என்ற கேட்ட அப்பா மீது கோபம்தான் பொத்துகொண்டு வந்தது. அம்மா உயிரோடு வாழ்ந்த காலத்தில அப்பா நிறைவெறி யில வந்து எத்தனை தரம் அம்மாவ காலால உதைச்சிருக் கிறார், அடிச்சிருக்கிறார் இதை யெல்லாம் கதவு மூலையில நின்று கண்ணால பார்த்து அம்மாவிற்காக அழுதிருக்கி றன் அப்பாவால அம்மா பட்ட கஷ்டங்கள் என்றால் சொல்ல முடியாதவை. இப்ப மட்டும் ஏதோ அப்பாவி மாதிரி வெள்ளைச் சேட்டும், வெள்ளை வேட்டியும் உடுத்தி அம்மாட துக்கப் பூசைக்கு போனார். உயிரோட வாழுற போது மட்டும் அம்மா பெரிசா தெரியல்ல. இப்ப மட்டும் சுடலை ஞானம் பிறந்திருக் குதோ! என்று மனதிற்குள் திட்டியவாறே ஜெகன் கோயி லுக்குப் போனபோது பூசை தொடங்கிவிட்டது. கண்களை மேலோட்டமாக சுழலவிட்ட போது அம்மாட உற்றார், உற வினர் சிலர் பூசைக்கு வந்தி ருந்தார்கள். பங்குச்சுவாமி யினுடைய மறைஉரை நெஞ் சிற்கு ஆறுதலாக இருந்தது. "உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்ப வன் இறப்பினும் வாழ்வான்" என்று சொல்லுகிறார் இயேசு. எனவே கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு துயில் கொண்ட மேரி மாகிரேட் ஒரு நாள் உயிர்த்தெழுந்து முடிவில்லா வாழ்வை சுதந்தரித்துக் கொள் வார் என்ற நம்பிக்கையில் வாழ்வோம். மரணம் ஒரு கிறிஸ்தவனுக்கு வாழ்வின் கடைசி வார்த்தை அல்ல. மாறாக முடிவில்லா வாழ்வின் ஆரபம். இறந்தோர் மீண்ட தாக வரலாறு இல்லை" என்று சுவாமி முடித்தபோது 'பாதர்' அம்மா இனி என்றைக்குமே உயிர்பெற்று எங்களிடம் திரும்பிவரமாட்டாவா? என்று கத்தவேண்டும் போலிருந்தது ஜெகனுக்கு. சிலுவையில் தொங்கிய கர்த்தரின் வத னத்தை உற்று நோக்கியபோது, கண்களில் நீர்த்துளிகள் சொட் டத்தொடங்கி நினைவுகள் பின் னோக்கி ஓடத்தொடங்கின. ஜெகனுடைய அப்பா கச்சேரி யில் ஒரு கிளார்க். மாதா மாதம் அரசாங்க சம்பளம் வாங்குபவராயினும் குடித்தே பணத்தை அழித்துவிடுவார். குடும்பத்தில் ஆறு பிள்ளைக ளுக்கு கடைக் குட்டியாய் பிறந்த ஜெகன் எத்தனையோ தடவைகளில் பட்டினியாய் பாடசாலைக்குச் சென்றிருக்கின் றான். அப்பா குடும்பத்தைப் பற்றி எதுவும் அக்கறையில்லா தவராய் தினம்தோறும் குடிபோதையில்தான் வீட் டிற்கு வருவதை அவன் கதவு இடுக்களினூடாக பார்த்திருக் கின்றான். வீட்டிற்கு வந்தால் அப்பாவினுடைய ஆரவாரம் அமர்க்களம் எல்லாம் முடிந் தால்தான் இரவிலே அமைதி கிடைக்கும். இல்லையென்றால் அம்மாவைத் திட்டுவதும், அடிப்பதும், சகிக்க முடியாத ளவு வார்த்தைகளை அள்ளி வீசுவதும் வழக்கமான அப்பா வின் ஆர்ப்பாட்டங்கள் அம்மா பாவம்தான்! இதற்கெல்லாம் ஈடுகொடுத்து எங்களை வளர்த்துவிட்டு மறைந்துவிட் டாள். வயது வந்த இரண்டு அக்காமாரைப் பற்றித்தான் அம்மா சரியாக கவலைப்படுவா. "இதுகளைத்தான் கண் மூடு றதுக்கு முன்னால கரைசேர்க்க வேணும். இல்லையெண்டா இது கள் கஷ்டப்படுறத பார்த்துக் கொண்டு நான் உயிரோட இருக்கமாட்டன்." என்று அடிக்கடி கூறும்போது அம்மா வைப் பார்க்க பாவமாகத்தா னிருக்கும் ஒரு முறை அப்பா குடிபோதையில் அம்மாவைத் திட்டி அடித்தபோது கூறிய வார்த்தைகள் ஜெகனின் நெஞ்சிலே ஆழமாக வேர் விட் டிருந்தது. அன்று அப்பா இரவு வெகுநேரம் கழித்து நிறைவெறியில் தள்ளாடிய படியே வீட்டிற்கு வந்திருந் தார். நாங்களெல்லாம் நித் திரை கொண்டிருந்தபோது அம்மாவினுடைய அழுகுரல் கேட்டு திடீரென விழித்துக் கொண்டோம். "என்னடி, உனக்கு நித்திரை" புருஷன் எப்பவும் வருவான் போவான். சாப்பாட்டைக் கொண்டு வாடி" என்று அப்பா கத்திய போது நாங்கள் பயந்து போனோம். வழக்கமாக மௌ னமாகவே இருக்கும் அம்மா பேசத்தொடங்கினாள். "ஏன் இவ்வளவு சத்தம் போடுறீங்க. பிள்ளைகளெல்லாம் நித்திரை கொள்ளுகினம். பக்கத்து வீட் டுக்காரர் உங்களைப் பற்றி என்ன நினைப்பினம். பேசாம சாப்பிட்டிட்டுப் படுங்க" என்ற போது "என்னடி, எனக்கு உபதேசம் பண்ணுற அளவிற்கு உனக்கு வாய் வந்திட்டுதோ. நான் உழைக்கிறன், குடிக்கி றன், நீ, யாரடி அதைக் கேட் கிறதுக்கு? என்னோட வாழுறது உனக்கு பிடிக்காட்டி உன்ர வீட்டிற்கே போயிரு. ஏதோ பெரிய தகைநட்டு, சொத்துப் பத்தெல்லாம் கொண்டு வந்த மகாராணி எண்டு மட்டும் நினைச்சு பேசாத" என்று ஆத் திரத்தோடு கத்தியபோது அம்மா கேவிக்கேவி சிறு பிள்ளை போல் அழுவதைப் பார்க்க எனக்கு அழுகையே வந்துவிட் டது. "உங்களை முடிச்சு நான் என்ன சுகத்தைத்தான் கண் டன். என்ர பிள்ளைகளுக்காகத் தான் நான் வாழுறன். இல் லாட்டி எப்பவோ நஞ்சு குடிச்சு செத்திருப்பன். பிள் ளைகளைப் பற்றிக் கொஞ்சமா வது உங்களுக்கு யோசனை இடையாதா?" என்ற போது திடீரென்ற சத்தம் கேட்டது, ... அம்மா தலையை தாங்கிப் பிடித்தவாறு 'அம்மா' என்று ஓலமிடுவதைத்தான் பார்க்க முடிந்தது. அம்மாவினுடைய நெற்றியிலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. நான் கதறியவாறே அம்மாவை அணைத்துக்கொண்டேன். அம்மாவினுடைய நெற்றியலி ருக்கும் வடு கூட என் மனக் கண் முன் இப்போது தெரிகின் றது. அண்ணனை இராணுவம் பிடித்து சென்றதின் பின் அவன் காணாமல் போனோர் வரி சையில் சேர்ந்துவிட்டதை நினைத்து அம்மா அநுபவிக்காத வேதனைகளே இல்லை. அம்மா ஏறி இறங்காத தடுப்பு முகாம் களும் இல்லை. அண்ணனை நினைத்துப் பசியோடு கிடந்த பட்டினி நாட்கள் தான் எத் தனை? என்றால் இவ்வளவு வரு டங்களும் எப்படித்தான் அம்மாவைப் பிரிந்து இருக்க முடிந்ததோ தெரியவில்லை. "பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்பது அம் மாவைப் பொறுத்த மட்டில் பொருந்தக்கூடிய முதுமொழி. அம்மா மறைந்ததிற்கு பின்பு அக்காவே எமக்குத் தாயாகி விட்டாள் அப்பாவிடம் 'ஏன் குடிக்கிறீர்கள் என்று கேட் டால் 'அம்மாவைப் பிரிந்த கவலை' என்பார். நான் இப் போது வளர்ந்துவிட்டேன். அப்பாவிடம் இன்றே நேரடி யாகவே கேட்டு விடப்போகின் றேன். "ஜெகன், பூசை முடிஞ் சிற்று. வீட்டிற்கு வரல்லையா" என்ற அக்காவின் குரல்கேட்டு என் சிந்தனைகளினின்று என்னை விடுவித்துக் கொண்டேன். 'அப்பா, அம்மாட ஆத்மா சாந்தியடையனும் எண்டா, நீங்க குடியை விடணும், அல் லது நாங்க உங்க பிள்ளைகள் எண்டத அடியோட மறந்தி டுங்க" என்று அப்பாவிற்கு சொல்லப்போகின்றேன் என்ற உறுதியோடு வீட்டை நோக்கி விரைகின்றேன்.

ஒளிமயமான எதிர்காலத் தின் நம்பிக்கைக் கீற்றுக்கள் என் உள்ளத்தில் ஒளிர, நடை யில் புதிய வேகம் பிறக்கிறது.

(யாவும் கற்பனையே)

## கவிநிலா

### பிறக்கின்றார்

(நவாலியூர் சி. என். செல்லத்துரை)

ஓர் இரண் டாயிரம்
ஆண்டுக்கு முன் அன்று
பேர் இழந் தோடவும்
பழி பல சூழவும்
'யூதேயா' நாடது
ஊழலிற் சிக்கியே
சீர் காணு நாடாகச்
சீரழிந் தோடிய
நாட்களோ பற் பல
நாணய மில்லாத
ஆட்களோ தங்களின்
பாட்டிலே வஞ்சனை
சூதுடன் பொய்யான
சூனிய வாழ்க்கையில்
ஊழுடன் விளையாடி
உருண்டிட்ட வேளையில்
மாசுதன் யேசு ஓர்
மகத்துவப் பாலனாய்
தேசுடன் 'யூதேயா' ப்
பெத்லேமில் தோன்றினர்.
ஏனிந்த மானிடம்
பாவத்தை அழைத்தது
நானென்ற கர்வத்தை
நெஞ்சுக்குள் விளைத்தது
என்றெண்ணித் தெய்வீக
யேசுதன் அன்பாலே
வன்பெண்ணி வாழ்ந்தோரின்
வழிமாற்றத் திடங் கொண்டார்.

(தொடரும்)

இசைப் பகுதிக்கு வயலின், புல்லாங் குழல் மீட்கக்கூடியவர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

இசைப்பகுதி
திருமறைக்கலாமன்றம்
2̃3, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# இளமைப் பருவத்தின் அழியாத கோலங்கள்

இளமைப்பருவம் ஒரு துடி துடிப்பான பருவம். உணர்ச்சிகள் கொந்தளிக்கின்ற, கொப்புளிக்கின்ற பருவமும்கூட. வாலப்பப்பருவம் மனித வாழ்க்கையிலேயே சிக்கலும், சிடுக்கலும் நிறைந்த ஒரு பிராயம். சரியா—தவறு என்று யோசிக்காமல் எந்தச் செயலையும் துணிச்சலாக செய்து பார்த்துவிடவேண்டுமென்ற வேகம் இந்த வயதில் ஏற்படுவது இயல்பானதொன்றே. பொறுப்புக்களை ஏற்கவோ, நிர்வகிக்கவோ உற்சாகம் இந்தப்பருவத்தில் பிறக்காது. இத்தகைய இயற்கைஇயல்புகளுக்குமாறுக கடமை, கட்டுப்பாடு என்று சொல்லி இளைஞர்களை கட்டிப்போட முயன்றால் இளைஞர்கள் மன அமைதி இழந்து விடுவார்கள். இப்பருவத்திலே இளைஞர்கள் மனதை பிடித்தாட்டி அலைக்கழிசகும் ஒன்று காதல் உணர்வாகும். காதல் உணர்ச்சிவயப்படாத, தொடாத இளைஞன் ஒருவன் இருந்தால் அவன் ஒன்றில் தனது காதலை சாமர்த்தியாக வைத்திருப்பவன் அல்லது கோழையாக இருப்பான் என ஊகித்துக் கொள்ளலாம். காதல் என்ற உணர்விற்கு திட்டவட்டமான கருத்தும், கண்ணோட்டமும் இல்லாத காரணத்தால் சில இளைஞர்களுடைய வாழ்க்கை சீரழிந்து ஏமாற்ற உணர்வுகளால் விரத்தி நிலைக்கு தள்ளப்படுகிறது. காதல்பசியைப்போன்ற இயல்பான உணர்வுதான். தெய்வீகத்தொடர்பு கொண்ட பெரிய இலட்சியமும் அல்ல. ஒரு விதத்தில் இந்த உணர்வு பாலுணர்வோடு தொடர்புடையது. இறைவனால் இன விருத்திக்காக அருளப்பட்ட இயற்கைச் சாதனமான பாலுணர்வை கட்டுப்பாட்டுடன் நெறிப்படுத்தாவிட்டால் இளமைக்காலம் விரயமாகிவிடும். வெறும் இன்பநுகர்வுதான் எல்லாம் என்று நினைத்து காதலித்தால் அது மன உடைவிற்கும், விரக்திக்கும் சாரணமாகிவிடும். வெறும்புற அழகிற்கு மட்டும் முதன்மையளித்து காதல் வயப்படுவோர் வாழ்க்கையில் மன அமைதியை இழந்து விடுவார்கள். இத்தகைய காதல் உணர்வோடுதான் ஒரு இளைஞன் வயது வந்தோர் (Adulthood) நிலைக்குள் நுழைகின்றான். இதனை காதல் காய்ச்சல் (Teenage Fever) என்று கூடச் சொல்லலாம். கல்விகற்கும் பருவத்தில் காதல் வயப்படுவோர் வெறும் உணர்வு நிலையில், இனக்கவர்ச்சி அடிப்படையில் மனதில் எழும் உணர்வுகளுக்கு இடமளிப்பதால், எதிர்கால அவர்களது திருமண வாழ்க்கை கூடபாதிப்படையலாம். இளைஞர்களே! காதல் உணர்வைத் தவறான கோணத்தில் அணுகி, மன அமைதியை இழந்து விடாதீர்கள். ஒரு பெண்ணைக்காதலித்து மணந்து கொள்ள இயலாதநிலை ஏற்பட்டால் ஏதோ வாழ்க்கையே முடிந்துவிட்டது என்று நடைப்பிணமாகிவிடும் இளைஞர்கள் நிலை பரிதாபதற்குரியதே. இத்தகைய மனோபாவத்தை வளர்த்துவிடுபவை திரைப் படங்களும், பத்திரிகைகளும். எனவே இளமைப்பருவத்தில் காதல் வயப்பட்டாலும், வெறும் இன்ப நுகர்வுக்காக மட்டும் காதலித்து உங்கள் வாழ்க்கையையும், ஆளுமையையும் சிதைத்துவிடாதீர்கள். வசந்தகாலத்தில் வாழத் துடிக்கும் இளைஞர்களே! உங்கள் வாழ்க்கையை வனுந்திரமாக்கி விடாதீர்கள்.

ஜேகான் ஸ்ரனி அன்ரனி
உயிலூர்

---

ஆ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.
1-12-1989




அன்பு நேயர்களே!

இளைஞர் உலகத்தை அலங்கரிக்க உங்கள் பலர் எழுதிய ஆக்கங்கள் பிரசுரமாகாமல் இன்னும் வைலில் தேங்கிக் கிடப்பதையிட்டு வருந்துகின்றேன். உங்களது சிறப்பான ஆக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அடிக்கடி மௌனமாய இருந்துகொள்ளவே நான் பெரிதும் விரும்புகின்றேன். உங்களிடையே புரிந்துணர்வும், வளங்கும் தன்மையும் வளர உயிர்த்துடிப்பான, ஆற்றலமிக்க இளைஞர் உலகத்தை உருவாக்க என்றும் முன்நிற்பீர்கள் என எதிர்பார்த்து நீங்கள் இளைஞர் உலகத்தின்மீது காட்டிவரும் அன்பிற்கு, அளவில்லாக் கரிசனைக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

நல்வாழ்த்துக்களுடன்,
அன்பு நெஞ்சன், வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு—51

அடைக்கலம்:- வருஷம் நத்தார் வந்தா மண்டை விறைக்குதண்ணை.

குருசு:- ஏன் தம்பி அந்த வருத்தம் வருகுது?

அடைக்:- விலைவாசியோட போட்டிபோட முடியுமா பின்ன?

குருசு:- கொண்டாட்டம் என்றி முதல் காரியம் என்னத்தைத் தின்ன... என்னத்தைக் குடிக்க... என்னத்தை உடுத்த... எண்ட சிந்தனைதான் ஒழிய வந்த நல்லநாளை நினைக்கிறதுக்கு நல்லசிந்தனை வளர்க்கவோ... நம் ஆன்மீகத்தை சுத்தப்படுத்தவோ சிந்தனையில்லை... வெள்ளையடிச்சு பூச்சுப்பூசி, வெறும் கல்லறையாக்கி எல்லோ பாக்க நினைக்கிறியள், முதல்ல எது முக்கியம் எண்டு புரிஞ்சு செய்யுங்களன். தலையிடி குறையும்.

## இவை வேண்டும் எமக்கு

ஆண்டவனைத் தினமும் வணங்க வேண்டும்—அதிலே
அருளினைக் கண்டு மகிழ வேண்டும்
இறைவார்த்தைப் பாதையில் நடக்க வேண்டும்—நல்ல
சாந்தமாய் வாழ்ந்து காட்ட வேண்டும்.

கொண்டாடும் சாதிகள் ஒழியவேண்டும்—அனைவரும்
குடும்பமாய் நின்று குலவ வேண்டும்.
உண்டாகும் அன்பினால் இணைய வேண்டும்—அதுவே
உயர்ந்த உலகை உருவாக்க வேண்டும்.

கண்ணுகைக் கல்வியை கற்கவேண்டும்—அது
காட்டும் வழியிலே நடக்க வேண்டும்
போலி வாழ்வினை ஒதுக்க வேண்டும்—இங்கு
புத்துலகை ஒன்றாய்ப் படைக்க வேண்டும்.

அன்பும் அறமும் இருக்க வேண்டும்—அவை
ஆற்றும் பணிகளால் சிறக்க வேண்டும்.
உண்மைகள் உயர்வாய் வாழவேண்டும்—அதனால்
உலகம் எம்மை மதிக்க வேண்டும்.

புண்ணியங்கள் வாழ்விலே செய்யவேண்டும்—என்றும்
புனிதராய் வாழ்ந்து நாம் திகழ வேண்டும்
பண்ணிடும் பணிகளில் பக்குவம் வேண்டும்—வாழ்வில்
பண்புகள் ஓங்கிச் சிரிக்க வேண்டும்!

ஞா[illegible]
நாவுட்டான்

---




## 3-ஜேகனும் இராணியும் மாறுபட்டவர்கள்

அவர்கள் பிறந்து வளர்ந்து வரும் குடும்பப் பின்னணி, அவர்களின் சமூகப் பண்பாடு, அவர்கள் கல்விகற்ற இடம், சூழல், அவர்கள் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் இவைதான் இவர்களை வேறுபட்டவர்களாக்குகிறது என்பதை விளக்குகிறது.

நீண்ட கட்டுரைகளாக இருப்பதால் தட்டிவிட்டுப் போகும் மனமும், சற்று கடினமான விடயம் என்பதால் வாசிப்பதில் கடினமும் இருக்கலாம்.

ஆனால் முக்கியமான பகுதி, அனைவரும் வாசிக்க வேண்டிய பகுதி. சேகரித்துவைக்க வேண்டிய பகுதி

உங்கள் குறிப்புக்களை விளக்கங்கள் தேவைப்படும் இடத்து கேள்விகளை, ஏன் இவற்றுடன் தொடர்புபடுத்தி உங்கள் கருத்துக்களையும் தாருங்கள்.

பெயர் வரவேண்டுமென சிலர் இப்பகுதியில் வந்தவற்றையே மீண்டும் வேறு வசனங்களில் எழுதுவதை அவதானிக்கிறோம். அவர்களுடன் தனிப்பட தொடர்பு கொள்வோம்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

கணவனும் மனைவியும், மனிதனும் மனுஷியும் மாத்திரமல்ல குறிப்பாக இந்த மனிதனும் (ஜேகன்) இந்த மனுஷியும் (இராணி) என்ற தனிநபர்கள் ஆவர். தனித்தன் மனிதர் அல்லது ஆட்கள் என்றவகையில் அவர்கள் வெவ்வேறானவர்கள்—மாறுபட்டவர்கள். இரண்டு மனிதர்கள் ஒரேமாதிரியானவர்களாய் இருப்பதில்லை. அவ்விருவருக்கும் பொதுவான பல அம்சங்களிருக்கலாம். பல அம்சங்களில் வித்தியாசங்களும் உண்டு. இந்த தனி ஆள் வித்தியாசங்கள் பின்வரும் காரணிகளின் அடிப்படையில் அமைகின்றன.

### குடும்பப் பின்னணி:

மனித மனத்தினதும், உணர்ச்சிகளதும் உருவாக்கத்துக்கு அவனது குடும்பமே பின்னணிக் காரணியாக விளங்குகின்றது. முக்கியமாக பெற்றோருடன் கொண்டுள்ள உறவுகளினாலேயே ஒருவனுடைய மனப்பாங்குகளும், உளப்போக்குகளும் ஆக்கப்படுகின்றன அல்லது உருப்பெறுகின்றன. ஒருவனின் ஆளுமைக் கட்டமைப்பைத் தீர்மானிப்பதில் அவனது பெற்றோருடனான உறவே பெரும்பங்கை வகிக்கின்றது. இந்த உருவாக்கம் நன்மையும் அளிக்கலாம், தீமையையும் ஏற்படுத்தலாம். வீட்டில் உள்ள தன் உறவினர்களுடன் கொண்டாடும் உறவுகளினாலும், குடும்பத்துக்கு வெளியே அவன் பழகிக் கொள்ளும் குறிப்பிட்ட சிலருடைய உறவுகளினாலும் அவனது மன, உள உருவாக்கமும், ஆளுமையும் அமைகின்றன.

### சமூகமும் பண்பாடும்:

சூழவுள்ள சமூக, பண்பாட்டுத் தாக்கங்கள் ஒரு குடும்பத்தைப் பாதிக்க ஏதுவாகின்றன. தனி மனிதனது மனோபாவங்கள், குணவியல்புகள், மதிப்பீடுகள் என்பன அவனது பண்பாட்டு, சமூக அமைப்புகளினாலேயே உருவாகின்றன. ஒரே சமூகத்தில் பண்பாட்டு வித்தியாசங்கள் நிலவலாம். உதாரணமாக இலங்கையில் பல இனமக்கள் வாழும் சமுதாயம்; கிராமிய பட்டின வாசிகளுக்கிடையில் ஏற்படும் வித்தியாசங்கள், சமுதாயத்தில் உள்ள மக்களின் தரங்களுக்கிடையிலான பேதங்கள்.

### கல்வியும் பாடசாலையும்:

பாடசாலைக் கல்வி என்பது வெறுமனே அறிவையும், செய்திகளையும் தரும் சாதனமாக மாத்திரம் அமைந்துவிடுவதில்லை. உள்ளார்த்தமாக வாழ்க்கையின் நோக்கங்களையும் ஓரளவு கற்றுத்தரும் சாதனமாகவும் விளங்குகின்றது. உலகை அறிந்துகொள்ள ஒரு திறவுகோலாகக் கல்வி அமைகின்றது எனலாம். சமயக் கல்வியைப் பொறுத்தவரை இதுவே உண்மையான நோக்கமாயிருக்கிறது.

விண்ணக
வாழ்வுக்கு வழிகாட்டி
-திருமறைநூல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் வாக்கு அறிவோம்

## 1-ம் மக்கபேயர் ஆகமம்

வாசக நெஞ்சங்களே !

இந்நூலில் "சமயமும்" "நாட்டுப் பற்றும்" இரண்டறக் கலந்துள்ளன. 'ஒரே இறைவன்' மேலுள்ள விசுவாசம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால், யூத சமூகமும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் முன்வைக்கின்றார். "இறைவனே வரலாற்றை நடாத்துகின்றார்" "தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் நிலையை நிர்ணயிப்பவரும் அவரே" என்ற ஆழ்ந்த சமயக்கருத்து இந்நூல் முழுவதும் பரவியிருக்கிறது.

"சட்டத்தை அனுசரி" என்ற "உபாகமம்" இறையியல்த் தொனி இங்கேயும் பலமாகத் தொனிக்கின்றது. இந்நூலில் வரும் போராட்டங்கள், சட்டத்தை அனுசரிப்பவர்களுக்கும் அனுசரியாதவருக்குமிடையே நடைபெறும் போராட்டத்தையே எடுத்துக் காட்டுகின்றன.

அப்படியிருந்தும் "சட்டம் மனிதனுக்காகவே" "சட்டத்தினால் மனிதனுக்கு அழிவுதான் நேரிடுமென்றால் சட்டத்தைப் புறக்கணிப்பது குற்றமாகாது" என்ற ஆழ்ந்த கருத்தை "ஓய்வு நாளில் யார் நம்மை எதிர்த்துப் போரிட வந்தாலும் நாமும் போர்புரிவோம்" (2:41) என்ற மத்தத்தியாஸ் குழுவின் வார்த்தைகள் உணர்த்தி நிற்கின்றன. கடவுளின் சட்டதிற்கு அடிபணிந்து, அரசனின் கட்டளையை மீறி, ஓய்வு நாளை அனுசரிக்க, பாலைவனத்தின் மறைவிடங்களில் ஒழிந்துகொண்ட மக்கள் மீது, அந்தியோக்கஸ் அரசனின் படை போர் தொடுத்து அவர்களை அழித்தொழித்தார்கள். இதனால் மனமுடைந்த மத்தத்தியாஸ் ஓய்வு நாளில் போரிடவும் தயாராகுகின்றார். (2:27—41)

"2ம் மக்கபேயர்" பற்றி இனிப்பார்ப்போமா...?

(தொடரும்)

அருள்திரு. பெனற்

### அறிந்துகொள்ளுங்கள் 96

## "உபாகமச் சட்டம்"

உபாகமம் சட்டம் பற்றிய அறிவுரைகளைப் பெரும் பகுதியாகக் கொண்டநூல். இந்நூல் பழைய ஏற்பாட்டிலேயே இறையியல் மிக்க நூலாகும் "ஆண்டவரே கடவுள், அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை" (உபா 4:35) யாவே இஸ்ராயேலின் ஒரே இறைவன். அவர் இஸ்ராயேலைத் தன்னுரிமையாகத் தெரிந்தெடுக்கிறார். விடுதலை செய்து கானானை உரிமைச் சொத்தாக அளிக்கிறார் இதனை உடன்படிக்கை வெளிப்படுத்துகிறது (உபா 7:8, 28:6). இப்படி அவர்களை தேர்ந்தெடுப்பதற்கு அவர்களின் தகுதி காரணமல்ல, அவர்கள் பால் அவர் கொண்ட அருள்நிறைந்த அன்பே காரணமாகும். (உபா 7:6—8, 4:37, 10:15) சட்டத்தை இஸ்ராயேல் கடைப்பிடித்து இறைவனுக்கு அன்புச்சேவை செய்தால் நலமும், வளர்ச்சியும், செழிப்பும், இறையாசீரும் அவர்களை வந்தடையும். (உபா 11:26—28, 28:15—69) கீழ்படியாமை தண்டனையையே அளிக்கும். கீழ்படியாமை தண்டனை, மன்றாட்டு, விடுதலை ஆகிய நான்கு சொற்களும் அடிக்கடி உபாகமத்தில் காணப்படுகின்றன.

உடன் படிக்கையில் இறைவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். அதற்கு மனிதன் அளிக்கும் பதில் சட்டத்தை கடைப்பிடிக்கும் ஒழுக்க வாழ்வாகும், இறைவனுக்குப் பயப்படவேண்டும் என்று உபாகமம் அடிக்கடி கூறுகின்றது. இப்பயம் கிலியாலோ, திகிலாலோ ஏற்படுவதன்று. இறைவன் தங்களுக்கு செய்தவற்றிற்கு காட்டும் அன்பின், நன்றியின் விளைவாக எழும் பணிவு மிக்க மரியாதையாகும். (உபா 6:4—9). இக்கட்டளையிலிருந்து யூதர்கள் நாள் தோறும் இருமுறை சொல்லும் "ஷேமா" வின் உன்னத வாசகம் உருவெடுக்கிறது. இக்கட்டளையே பெரியது. முதன்மையான கற்பனை என்று யேசு கூறுகிறார்.

இஸ்ராயேலர் இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்ட அவருக்கே உரிமையும் உடைமையுமான மக்கள். ஆதலால் பிற சமய மக்களின் பழக்க வழக்கங்களிலிருந்து அவர்கள் பிரிந்திருக்க வேண்டும். (உபாக 7:25, 12:29—31, 18:9, 20:16—18).

உபாகமத்தில் வரும் சட்டங்கள் சமய, சமூக ஒழுக்க கடமைகள் பற்றி ஒழுங்கு படுத்துகிறது. பத்திலொருபங்கு காணிக்கை, மற்றக் காணிக்கைகள் பற்றியும், 16-ம் அதிகாரத்தில் கூறப்படும்.

(தொடரும்)

இ. ம. ஜெயசிலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக அன்பர்களே!

இன்றைய காலகட்டத்திலே- இறைமகன் இயேசுவை- அவரின் நல்வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் காலமிது! ஆனால் நாம் கோவிலிலும், "குடிலிலும்" இயேசுவைத் தேடுகின்றோமேயொழிய அவர் அசித்த "தேடலை" நாம் மறந்து விடுகின்றோம்.

இதனையே முதுமொழியாளர்- "ஏழைகளின் சிரிப்பில்- இறைவனைக் காண்"! என்றார்கள்.

இயேசுவின் பொன்மொழியும்- "இவர்களுக்குச் செய்யும் போதெல்லாம்- எனக்கே செய்தீர்கள்" என்று கூறிப் போந்தார். பழமொழி ஆகமம் 19/17 இல் கூறுவதையும் கேட்போம்... "ஏழைக்கு இரங்குகிறவன் ஆண்டவருக்கு வட்டிக்குக் கொடுக்கிறான்- அவரும- அவனுக்கு கைமாறு அளிப்பார்." என்கிறது. உற்றுக் கவனியுங்களேன! இறைவாக்கின் நிறைவேற்றம் கிறிஸ்துவே! என்பதற்கு 'பழைய ஏற்பாடும்- முதுமொழிகளும் சான்று பகருகின்றன அல்லவா?

"குடிலில் தேடும் பாலகனை உங்கள் சமுதாயத்தில் தேடுங்கள்." என்று, எமது மனதை இவ்வார்த்தைகள் இடித்துரைப்பதுபோல படவில்லையா?

அடுத்து "வருந்துகின்ற மகன்- திருந்தி நடப்பான்" என்கிறது முதுமொழி, அத்தோடு- "கெட்ட பின்பு ஞானி" என்றும் கூறுவார்கள்.

நமது பிள்ளைகளை திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் வளர்க்கலாமேயொழிய அவர்களை "நாசமாகிப் போ" என்று பெற்றோர் திட்டித் தீர்க்கலாமா? திருநூல் இப்படிக் கூறுகிறது 19/18 இல் "உன் மகன் திருந்துவான் என்னும் நம்பிக்கையுடன் அவனைப் படிப்பி! ஆனால்-? அவனுக்கு சாவு வரும்படி எதையும் செய்யத் தீர்மானியாதே" என்று, ஆழ்ந்த அறிவுடன் நிதானித்து செயல்பட இது எம்மைத் தூண்டுகிறது.

இந்தக் கருத்துக்கள் பெற்றோர்கள் மட்டிலுள்ள கடமையை எடுத்துக் கூறுகிறது

உங்கள் பிள்ளைகள் மட்டில் நீங்கள் எப்படி நடந்துகொள்கிறீர்கள்.? சிந்தியுங்களேன்!!

### வாரம் ஒரு சிந்தனை

"மரம், கடவுளின உத்தரவு பெற்று, தன்னை வளர்த்தவனுக்கு கனியைக் கொடுக்க வேண்டும்? "!

சிந்திக்க வைத்து- சந்திக்க வரும்.

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.

பிணியினைத் தீர்க்கும் வார்த்தை போற்றி!
பிழைகளைப் பொறுக்கும் வார்த்தை போற்றி!
பணிவினைப் புகட்டும் வார்த்தை போற்றி!
பலியினை வளர்க்கும் வார்த்தை போற்றி!

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 43 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### அங்கத்துவம்

266 அ. நீ. அன்ரனி நெல்சன் 10 புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்
367 யே. மரியா அருளரசி 10 புனித அந்தோனியார் றோ. க. பெ. பா. யாழ்ப்பாணம்
268 ம. அனுஷா 11 நாரந்தனை றோ. க. ம. வி.
269 இ. செல்மர் எமில் 10 புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை
270 தே. டோ. கிறிஸ்ரி துரம் 9 பத்மிமா ம வி. மன்னார்
271 பே. அமல் றமேஸ் கூஞ்ஞ 9 சென் ஆன்ஸ் ம, வி, வங்காலை.
272 V. வெர்ஜின் பெர்ணாண்டோ 6 அ. த. க. பாடசாலை தலைமன்னார் பியர்
273 அ. நெசில் சுபாஜினி 10 றோ. க. த பாடசாலை, இலகடிப்பிட்டி

### கௌரவ அங்கத்துவம்:

A 34 ஜெ. தனபாலன் பெர்ணாண்டோ 13 புனித சவேரியார் பெ. ம. வி. மன்னார்
A 35 M. பிரபாகரன் 12 நானாட்டான் ம. வி.

### வினா-விடை முடித்துத் தாருங்கள்

என்ன விழா? உதய விழா.
என்ன உதயம்? குழந்தை உதயம்.
என்ன குழந்தை? அன்புக் குழந்தை
என்ன அன்பு? தாய் அன்பு......

மிகுதியை (15 வரிக்குள்) எழுதி அனுப்புங்கள். அங்கத்துவ எண்ணை எழுத மறக்க வேண்டாம்.

அன்பின் அன்புவிழி

**இறைவழியில் இருள் இருப்பதில்லை**

### ஆசையின் அழிவினில்

ஆதியில் பெற்றோர் கொண்ட அவ்வாசை
அழிவினில் கொண்டு சேர்த்த பேராசை
தலைமுறை தலைமுறை தொடரும் அவ்வாசை
தலை குனிய வைக்கும் மண்ணாசை
ஆசை மூன்றே அழிவு ஒன்றே
இளைய தலைகள் ஆசையின் மீதியால்
இன்புறும் காட்சிகள் பல சுற்றினில்
இதனால் அழிவுறும் காட்சிகள் அநேகம்
துறவிகள் துறப்பதும் உலகாசை
ஆசையின் ஆசையினால் அழிவுறும் ஆற்றல்
ஆதவன் கண்ணுக்கு புரிய முடியாப் புதிர்
ஆசையின் அழிவினில் யாம் ஓசையிடும் நிலைமறந்து
கசையடி பெறினும் தயக்கம் மறந்து
அசைந்து அசைந்து வாழ்ந்திடுவோம்.

அ. இன்பராஜ் லெம்பேட்
கௌ. அங். எண். A/32

### கற்றிடுவோம்

மலர்ந்து மணம் வீசும் இலங் காசினிலே
வாழும் மாணவர் யாவருமே
கசடறக் கல்வி கற்றிடுவோம்.
இனிதாய் உலகினில் வாழ்ந்திடுவோம்.

மனிதவாழ்வு யாம் பெற்றோம்
வையகத்தில் உயர்வாய் வாழ்ந்திடவே
இனிய கல்வி இல்லை யென்றால்
இருப்பதில் இறப்பது மேலாகும்

பார்போற்றும் மேதைகளாய்
பாரினிலே வாழ்ந்திடவே
இன்றே ஒழுங்காய் கற்றிடுவோம்
உலகினில் உயர்வாய் வாழ்ந்திடுவோம்.

ஆக்கம்:- சூ. யூடிற் லலினி
அங்கத்துவ எண் 188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங். சகோதரர் ஹிலறி ஜோசப் ஞாபகார்த்த சங்கம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

| பரிசுபெறுவோர் பெயர்/விலாசம் | | சீட்டிலக்கம் |
|---|---|---|
| 1ம்-பரிசு | பீ. ஜெலின்டன் யூலியன், குமுழுயங்குளம். | 08436 |
| 2-ம் பரிசு | அ. தாசன், பாப்பா மோட்டை. திருக்கேதீஸ்வரம். | 09262 |
| 3-ம் பரிசு | செல்லையா பாலு, சின்னக்கரிசல். | 09877 |
| 10 ஆறுதல் பரிசுகள் | | |
| 1. | யோகேஸ்வரி டேவிட், சின்னக்கடை, மன்னார். | 00777 |
| 2. | ச. மிரியம் சிராய்வா, யூட் வீதி, பேசாலை. | 03154 |
| 3. | ச. எவரெஸ்டா, திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார். | 3300 |
| 4. | ம. சிவகுமார், இசங்கன் குளம், வட்டக்கண்டல். | 05962 |
| 5. | ச. றேஸ் வெனெஸ்டா, காத்தான்குளம், வட்டக்கண்டல் | 07438 |
| 6. | க. கருணாகரன், புங்கன் தாழ்வு உயிலங்குளம். | 08146 |
| 7. | சுஜிதா வேலு, செபஸ்தியார் கோவிலடி, மன்னார். | 08897 |
| 8. | க. றோஸ்மேரி, நொச்சிக்குளம், உயிலங்குளம் | 08345 |
| 9. | ந. சுரேந்திரன், சாவற்கட்டு, மன்னார். | 10145 |
| 10. | ச. ரஞ்சினி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார். | 11301 |

A/291

## விற்பனைக்கு

தரமான வெளிநாட்டு நத்தார் புதுவருட வாழ்த்து மடல்கள் தொகையாகவும், சில்லறையாகவும், மலிவாகவும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

றஞ்சித் கிறீற்றிங்ஸ்
16, கொன்வென்ற் லேன்,
யாழ்ப்பாணம்.

கல்யாணி
பஸ் நிலைய முன்பு
192, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பொன்ராஜா ஸ்ரோர்ஸ்
செபஸ்தியார் கோவில் முன்பாக,
கரம்பொன், ஊர்காவற்றுறை. A/290.

இரக்கத்தின் மாதா பக்தர்களுக்கு !
தவிர்க்க முடியாத காரணங்களால் பின் போடப்பட்ட
பல்லவண்ணன் கேணி
புனித கன்னிமரி இரக்கத்தின மாதா
## வருடாந்த திருவிழா
மார்கழி 8-த் திகதி வெள்ளிவாரம்
காலை 7-00 மணிக்குத் திருப்பலிப் பாடற்பூசையோடு முடிவடையும்.
கிருபை தயாபத்தின் மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே!
நீதியுள்ள சமாதானத்தைப் பெற்றுத் தந்தருளும்.
A/298

### 2-ம் ஆண்டு நினைவு



திருமதி.
செபஸ்ரியாம்பிள்ளை மேரி

அன்னை: மடியில் 20-04-1920
இறைவன்: அடியில் 4-12-1987

இறைவன் அடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே உமது நீங்காத நினைவுகள் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

இவவின் ஆன்ம சாந்திக்காக 4-12-1989 அன்று திங்கட்கிழமை பாண்டியன் தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் மாலை 5-30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவவின் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்
இல 61/1, ஈச்சமோட்டைவீதி.
யாழ்ப்பாணம். A/284


### 50-ம் ஆண்டு நினைவஞ்சலி

கப்டன் எச். எம். பெனடிக்ற்
மண்ணில்: 11-02-1887
விண்ணில்: 26-11-1939

''நீர் என்மேல் ஈசோப் புல்லினால் தெளித்தருள்வீர், நான் சுத்தமாவேன்'' என்ற சங்கீதத்தை மரணப்படுக்கையில் பாடிக் கொண்டிருந்த எம் அருமைப் பப்பாவே! உங்களுக்கு நித்திய இளைப்பாற்றியை ஆண்டவன் அருள்வாராக!

என்றும் உங்கள் நினைவாக
பிள்ளைகள், மருமக்கள், பேரர், பூட்டர், உற்றார், உறவினர்.
உதயதிசை
ஊர்காவற்றுறை A/285

### 2-ம் வருட நினைவு



மனுவல் மத்தேயு
மலர்வு: 1944-04-23
உதிர்வு: 1987-11-28

''வாழ்வு மாறுபடுகின்றதே அன்றி அழிக்கப்படுவதில்லை''
உயிரின் ஊற்றாகிய இறைவா! எம்மை அன்புடனும், பண்புடனும் வளர்த்துப் பேணிக் காத்து உம்மில் விசுவாசமுடன் வாழ வழிகாட்டிய எம் தந்தையின் பாவங்களை மன்னித்து உமது நித்திய சந்நிதியில் இன்ப சாந்தியை அனுபவிக்க அருள்புரிய வேண்டுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 27-11-89 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.
சென் தோமஸ் லேன்
பருத்தித்துறை. A/282

### 31-ம் நாள் நினைவு



சந்தரசு வஸ்தியாம்பிள்ளை
(செல்லம்மா)
மண்ணகம்: 21-11-1918
விண்ணகம்: 3-11-1989

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்.

இரக்கமுள்ள மீட்பரே! மனுமக்களை அன்பு செய்பவரே! சந்தானுவை உமது விண்ணக வீட்டில் சேர்த்தருள மன்றாடுகிறோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக தும்பளை லூர்து கெபியில் 2-12-89 சனிக்கிழமை காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர், மாமன், உற்றார்
உறவினர்.
பீச்றோட்
பருத்தித்துறை. A/281

### 3-ம் ஆண்டு நினைவு



திருமதி. எலிசபெத்
பொன்னையா
அவனியில்: 5-4-1913
ஆண்டவனில்: 4-12-1986

அம்மா நீர் எம்மை விட்டு
இறைவனடி சேர்ந்துவிட
மூவாண்டு கவலையுடன்
இங்குநாம் வாழ்ந்திட்டோம்
உம்மக்களை நினைந்து
வேண்டுவீர்.

இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 4-12-1989 திங்கட்கிழமை காலை 6-15 மணி அளவில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

மாரீசன்கூடல்
இளவாலை. A/269

### 15-ம் ஆண்டு நினைவு



திருமதி மேரி அக்னெஸ்
இராசையா
மண்ணில்: 15-8-1921
விண்ணில்: 7-12-1974

எண்ண இறையூட்டி
உண்ண உணவூட்டி
வாழ வழிகாட்டி
எம்மைப் பிரிந்த அன்னையின்
ஆன்மா அமைதிபெற
அருள்வாய் இறைவா!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை
7-12-89 A/283

### 31-ம் நாள் நினைவு



யோசேப் நீக்கலஸ்
(ஜெயபாலன்)
மண்ணில்: 14-11-1948
விண்ணில்: 9-11-1989

உத்தமனே! நற்குணனே!
உன்முகத்து ஒளியினிலே
நாம் அகமலர்ந்த வேளையிலே
அணைந்த சுடரானாயோ
கல கலத்த வாழ்க்கை
யெல்லாம்
உன்மறைவால்
கனவாகிப் போனதையா!

இவரின் ஆன்மசாந்திக்காக 9-12-89 (சனி) காலை 6-15 க்கு யாழ். மரியன்னை பேராலயத்திலும், 19-12-89 (செவ்வாய்) அடம்பன் புனித வியாகுல மாதா ஆலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், தாய்,
சகோதர சகோதரிகள், மாமன்,
மாமி, மைத்துனர், மச்சான்மார்,
மருமக்கள்.
பிறப்பிடம் –
யாழ். நாவாந்துறை
வசிப்பிடம் –
சகாயவீதி, அடம்பன்
A/280

### 8-ம் வருட நினைவு



தொம்மைப்பிள்ளை
சூசைப்பிள்ளை (சின்னத்தம்பி)
தோற்றம்: 4-2-1904
மறைவு: 7-12-1981

இரக்கமுள்ள இறைவா உம்மிடம் அழைத்துக் கொண்ட சூசைப்பிள்ளை அவர்களிற்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-12-89 காலை 7-30 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நீங்காத நினைவுகளுடன்
அன்னாரின் குடும்பத்தினர்
நெடியகாடு,
வல்வெட்டித்துறை. A/287

## வெளிவந்து விட்டது

- கிறிஸ்மஸ், புத்தாண்டு பூசைப் பாடல்கள்.
- ★ எமது இசைக்கலைஞர்களின் ஒப்பற்ற படைப்பு.
- ★ மறைக்கல்விநிலையம் தரும் மகத்தான கிறிஸ்மஸ்வெளியீடு.

''நமக்கென ஒரு பாலன்''
ஒலிப் பதிவு நாடா—
கிடைக்குமிடம்:-

மறைக்கல்வி நிலையம்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
A/288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன்

PATHUKAVALAN


## கட்டுரை கவிதைப் போட்டி

மாணவ, மாணவியரே!

மறைத்திரு. மேரி பஸ்ரியன் கல்வி உதவித்திட்டத்தின் ஆதரவில் நடாத்தப்படும் கட்டுரை—கவிதைப் போட்டியில் கலந்து கொண்டு பெறுமதிமிக்க ரொக்கப் பரிசில்களை வெல்லுங்கள்.

கட்டுரைத்தலைப்பு:—''மனித மாண்பினை மதி''

கவிதைத் தலைப்பு:—''உதித்தனன் உலகம் உய்ய''

* ஒருவர் இரு போட்டிகளிலும் பங்கு பற்றலாம்.
* கட்டுரையானது ''புல்ஸ்காப்''தாளில் தெளிவாக ஒரு பக்கத்துக்கு மேற்படாமல் எழுதப்படல் வேண்டும்.
* கவிதை ''புல்ஸ்காப்'' தாளில் 20 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

| கட்டுரைப் போட்டி | கவிதைப் போட்டி |
|---|---|
| 1-ம் பரிசு—250·00 ரூபா | 1-ம் பரிசு—200-00 ரூபா. |
| 2-ம் பரிசு—150-00 ,, | 2-ம்பரிசு —150-00 ,, |
| 3-ம் பரிசு—100-00 ,, | 3-ம் பரிசு—100-00 ,, |
| 10 ஆறுதல் பரிசுகள் (50-00) ரூபா | ஆறுதல் பரிசு I—50-00 ,, |
| | ஆறுதல் ,, II—25-00 ,, |

ஆக்கங்களை உங்கள் பெயர், பாடசாலை, முகவரியுடனும் உங்கள் பங்குத்தந்தையின் அத்தாட்சியுடனும் எதிர்வரும் 30-12-1989க்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர்
பஸ்ரியன் கல்வி உதவித்திட்டம்,
யா/சம்பத்திரிசியார் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

## பூநகரி பாதுகாவலன் விநியோகத்தில் எமக்கு உதவிபுரியும் முகவர்கள்

| | | |
|---|---|---|
| 1) | செல்வி. ஜீவா லூசியா, தி. கு. க. மடம், இரணைதீவு, பூநகரி, | 10 |
| 2) | திருமதி, டி. யேசு அடியாள் இரணைதீவு, பூநகரி. | 10 |
| 3) | திருமதி சந்திரா செல்லத்துரை, நாச்சிக்குடா, பூநகரி. | 02 |
| 4) | செல்வி, பொபி சேவின், தி. கு. க. மடம், இரணைதீவு, பூநகரி. | 10 |
| 5) | யே. பிரான்சிஸ் (மனோ தேநீர்க்கடை) பளைகுடா, பூநகரி. | 20 |
| 6) | திருமதி. டி. செல்வராணி,(ஆசிரியை) இரணைதீவு பூநகரி. | 10 |
| 7) | திரு. டி. தனிநாயகம் இரணைதீவு பூநகரி. | 15 |
| 8) | அருட்திரு. சி. ஜி. ஜெயக்குமார் வலைப்பாடு பூநகரி. | 75 |

## நீர்கொழும்பு பாதுகாவலன் விநியோகத்தில் எமக்கு உதவி புரியும் முகவர்கள்

| | | |
|---|---|---|
| 1, | திரு. ஜி. ஆர். பெர்ணாண்டோ, 231/10 கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு. | 05 |
| 2, | அருள்திரு. ஜே. ஜே. இம்மானுவேல், புனித செபஸ்தியார் கோயில், நீர்கொழும்பு. | 40 |
| 3. | திரு கே. எம். ஆர். பெர்ணாண்டோ 68/1 சென். நீக்கலஸ் றோட், முன்னக்கரை, நீர்கொழும்பு. | 15 |
| 4. | செல்வி காமலின் பெர்ணாண்டோ, 4/1 பொலொஞ்ஞா மாவத்தை, கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு. | 10 |
| 5 | செல்வி இ. பிறின்சி பெர்ணாண்டோ, 25/2, கீர்த்தி சிங்க பிளேஸ், கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு. | 10 |
| 6. | செல்வி. மேரி கொன்சி 98/3 லூயிஸ் பிளேஸ் கடற்கரைத் தெரு, நீர்கொழும்பு | 10 |
| 7. | திருமதி டபிள்யூ. ஏ. சீ. அலெக்சாண்டர், 163/12, கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு | 05 |
| 8. | திருமதி டபிள்யூ. டீ. லைசின் பெர்ணாண்டோ, 6, கீர்த்தி சிங்கி பிளேஸ், கடற்கரைத்தெரு, நீர்கொழும்பு. | 15 |


இப்பத்திரிகை திரு. நிக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மார்கழி மாதம் 1ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
இல: QR/ 1801/ 58/81


## இலங்கை நிலைமைபற்றி ஆசிய பத்திரிகைச் செய்தி

இலங்கை நிலைமைபற்றி ஹொங்கொங் இல் இருந்து வெளிவரும் ஏசியாபோகஸ் பத்திரிகை கீழ்க்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சர்வகட்சி மகாநாட்டின் பின்னர் சட்ட விரோதமான ஆயுதம் தரித்த குழுக்களினால் மேற்கொள்ளப்படும் செயல்களைப் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதற்கென அரசு ஓர் விசாரணைக் குழுவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. உயர்தர பொலிஸ், சிவில் அதிகாரிகளைக் கொண்ட இக்குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர்கள் வெளியிடப்படமாட்டா.

கடந்த இரு ஆண்டுகளில் 4000 த்துக்கு மேற்பட்டோர் அரசைக் கவிழ்க்க முயலும் இடதுசாரியினரால் கொல்லப்பட்டுள்ளனர். அரசின் இராணுவமும் தொண்டர் படைகளும் இன்னும் பல ஆயிரக்கணக்கானோரைக் கொன்றுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாஸாவினது அழைப்பின் பேரில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குழுவொன்று மனித உரிமை மீறல்களை ஆராயவும், மனிதாபிமான சேவைகளை அளிக்கவும் இலங்கை வந்துள்ளது. முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கோரிக்கைக்கிணங்க பிரச்சினை பற்றியும், வேலைவாய்ப்பு, கல்வி முதலியவற்றைப் பற்றியும் ஆராய ஒரு குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார் என அச்செய்தி கூறுகிறது.

## மலையக மறையாசிரியர்களின் நன்றி

புரட்டாதி மாதம் 12-ந் திகதி தொடக்கம் 17-ந் திகதி வரை நுவரெலியா மறைக்கல்வி நிலையத்தில் மாலை 4-00 மணியளவில் மறையாசிரியர்களுக்கான வகுப்புகள் ஆரம்பமாகின.

இந்தக் கருத்தரங்கில் நுவரெலியா, இராகலை, பூண்டுலோயா, பொகவந்தலாவை, தலவாக்கெலை, ஹட்டன், கண்டி, படிவத்தை முதலிய பங்குகள் பங்குபற்றின. தங்களது சிரமத்தையும் பாராது எமக்கு சிறப்பு வாய்ந்த கருத்துக்களைத் தந்து, எம்மைப் பரீட்சைக்கும், வாழ்க்கைக்கும் ஆயத்தம் செய்தோர் பலர். கண்டி மறைக்கல்வி நிலையத்திலிருந்து சமூகம் தந்திருந்த சங். சகோதரி எலிசபெத், திரு. ஞானப்பிரகாசம் அவர்களும், கொழும்பு மறைக்கல்வி நிலையத்திலிருந்து சங். சகோ. பெனடிக்ரா, ஆசிரியை திருமதி மரியரட்ணம் அவர்களும், எமது நிலைய அருட் சகோதரிகள் ஹில்லறி, திரு மற்றும் சங். சகோதரி அந்தோனியா ஆகியோரும் மறையாசிரியர்களின் ஆன்மீக தேவைகளைப் பற்றியும், இன்று சமுதாயத்தில் அவர்களது நிலை, பணி பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். எமது வாழ்க்கையில் நாம் எதிர்நோக்கும் உலக சவால்கள் பற்றியும், அதை எவ்வாறு நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் க. பீட்டர் தம்பதிகள் விளக்கிக் கூறினர்.

எமக்குப் பயனுள்ள கருத்துக்களைத் தந்து உரையாற்றிய அனைவருக்கும், விசேடமாக இக் கருத்தரங்கை ஒழுங்கு செய்த எமது நுவரெலியா மறைக்கல்வி நிலைய அதிபர் அருட்திரு ஆபிரகாம் அடிகளாருக்கும், கண்டி மறைமாவட்ட மறையாசிரியர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தகவல்:-
மெர்லின் ரட்ணமலர்பிள்ளை

## யாழ். மறைவட்ட நியமனங்கள்

அருள்திரு அன்ரன் ராஜநாயகம் - மானிப்பாய் பங்குத்தந்தை
அருள்திரு எஸ். இ. என். குணசீலன்- பாண்டியன்தாழ்வு ,,
அருள்திரு ஆர். எம். ஜி. நேசநாயகம் - பருத்தித்துறை ,,
அருள்திரு எம்.எம்.எல். மொன்போட் - சுன்னாகம் ,,
அருள்திரு ரீ. இ. செபஸ்ரியன் - உருத்திரபுரம் ,,
அருள்திரு கிறிஸ்ரி செல்வராசா - கரவெட்டி ,,
அருள்திரு ஆர். ஸ்ரலின் - முல்லைத்தீவு ,,
அருள்திரு ஆர். சூசைநாதன் - மாங்குளம் ,,
அருள்திரு எம். பி. ஞானரத்தினம் - வட்டக்கச்சி ,,
அருள்திரு ஏ. லோறன்ஸ் - சாவகச்சேரி ,,
அருள்திரு ஜி. இ. எம். யோசவ் – சவேரியார் குருமட விரிவுரையாளர்
அருள்திரு ஆர். எச். சகாயநாயகம் – மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர்.
அருள்திரு யே. நீக்கிலஸ் – வழிபாட்டு நிலைய இயக்குநர்.
அருள்திரு என். எம். சவிரிமுத்து – கலாச்சார நிலைய இயக்குநர்.
அருள்திரு எவ். ஞானனந்தன் – சவேரியார் குருமட விரிவுரையாளர்.
அருள்திரு ஜெரோ செல்வநாயகம்–சம்பத்திரிசியார் கல்லூரி
அருள்திரு ஏ. ஐ. பேனுட் – சம்பத்திரிசியார் கல்லூரி.

உதவிப் பங்குத்தந்தையர்கள்

அருள்திரு சி. யே. அன்ரனிபாலா - யாழ். பேராலயம்
அருள்திரு எம். டேவிட் - மானிப்பாய்
அருள்திரு ஜே. பீ. அன்ரனி - கிளிநொச்சி
அருள்திரு எஸ். இயூஜின் பிரான்சிஸ் - புங்குடுதீவு, நாரந்தனை
அருள்திரு ஏ, எவ். பெனட் - மயிலிட்டி, ஊறணி
அருள்திரு ரீ. ஏ. தவ்ராஜசிங்கம் - முல்லைத்தீவு
அருள்திரு எம். எக்ஸ். கருணாரத்தினம் - பாஷையூர்

## மீட்டல் வகுப்பு

கிறீஸ்தவம் (றே/க) உயர்தரம், டிசம்பர் 1989 மாணவர்களுக்கு உதவு முகமாக மார்கழி 3-ந் திகதி பி. ப. 3.00 மணிக்கு பாஷையூர் புனித அந்தோணியார் ஆலய மண்டபத்தில் இலவசபரீட்சை இறுதித் தயாரிப்பு நடைபெறும்.

## இலவசம்

இந்த ஆண்டு வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகைகளைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் அவற்றை எமது அச்சகத்திற்குக் கொண்டு வந்து இலவசமாக ஒரு புத்தகமாகக் கட்டிச் செல்லலாம். (ஆ—ர்)

## சந்தாதாரர்களுக்கு

~~தபால் மூலம்~~ ''பாதுகாவலன்'' தனிப்பிரதி பெறுபவர்கள் ரூபா. 150/- செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு 1990 இல் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

முகவர்கள் மூலம் பத்திரிகை பெற விரும்பாதவர்கள் ஆண்டு சந்தா ரூபா. 150/- செலுத்தி தபால் மூலம் தனிப் பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு வாராவாரம் வான் கடிதம் மூலம் அனுப்ப ஆண்டு சந்தா ரூபா 950/- மட்டுமே.

புத்தாண்டு நன்கொடையாக பாதுகாவலன் ஆண்டு சந்தாவை உங்கள் நண்பர்களுக்குக் கொடுங்கள். பயனுள்ள கொடை இது. நன்கொடையாளர் பெயர், ஆண்டு முழுவதும் நண்பருக்கு அறிவிக்கப்படும்.

சந்தாவை காசோலை, தபால் கட்டளை அல்லது காசுக் கட்டளையாக நிர்வாக ஆசிரியர், பாதுகாவலன், அ. பெ. இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

"உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம்" என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org